# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 3710/விசாரணை/E/2021 (SA 10402/E/2021)**

திரு.M.P.பிரசாந்த் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
நொளம்பூர், சென்னை மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது ஏற்கனவே 23.08.2021 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்ச்சியாக 25.08.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்பாக, இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

1. *மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணையின்போது இவ்வழக்கில் தனக்கு தகவல்கள் தேவையில்லை என்று தெரிவித்தன் அடிப்படையில், தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில் இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், **மதுரவாயல் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள்,** இவ்வாணையத்தின் 23.08.2021 தேதியிட்ட உத்தரவினை நிறைவேற்றாத பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை கண்டறிந்து, அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று, **இவ்வாணையத்தில் 31.10.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

2. மேற்குறித்த உத்தரவிற்கிணங்க, மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.செல்வராணி 10.02.2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி, மதுரவாயல் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலரின் 09.02.2026 தேதியிட்ட அறிக்கையை தாக்கல் செய்தார்.

3. மதுரவாயல் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர் 09.02.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திருமதி.சிவகலா என்பவரின் 10.11.2025 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். மேலும், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் வயதுமுதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது என்றும் தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூலமான விளக்கத்தில், ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு கிராம நிர்வாக அலுவலகத்தில் ஆவணங்கை பார்வையிட அனுமதி வழங்கி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிராம நிர்வாக அலுவலருக்கும், அதன் நகலினை மேல்முறையீட்டாளருக்கு 24.09.2021 மற்றும் 05.10.2021 ஆகிய நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் 28.09.2021 அன்று அனுமதி கடிதத்தை நேரில் பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் 29.09.2021 வரை ஆவணங்களை பார்வையிட மேல்முறையீட்டாளர் வரவில்லை என கிராம நிர்வாக அலுவலர் தெரிவித்ததாகவும்,தான் பொதுத் தகவல் அலுவலர் என்ற முறையில் ஆணையத்திடமிருந்து வரப்பெற்ற அனைத்து மனுக்கள் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் வரப்பெற்ற மனுக்களின் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தும் பராமரிப்பது அ2 பிரிவு வருவாய் உதவியாளர் என்றும், அவரிடம் 11.11.2025 அன்று விவரம் கேட்டதற்கு, அனைத்து மனுக்கள் மீதும் நடவடிக்கை எடுத்ததற்கான விபரத்தினை அவ்வப்போது ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்தாகவும் தெரிவித்துள்ளதை ஏற்றும், அவர் பணிஓய்வு பெற்றுள்ளதை கருத்தில் கொண்டும், அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

**ஆணை நாள் : 08.04.2026** **ஓம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 3710/விசாரணை/E/2021 (SA 10402/E/2021)</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகம்,
நொளம்பூர், சென்னை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகம்,
நொளம்பூர், சென்னை மாவட்டம்.

திரு.M.P.பிரசாந்த் த/பெ.திரு.M,பொன்னன்
14/A 2வழது தெரு, மாதா கோயில் நகர்,
நொளம்பூர், மதுரவாயல் வட்டம், சென்னை-95.

Copy to: File

RJ/PS 8.4